# நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சி – கடன் அட்டை முக்கிய விடயங்கள் உள்ளடக்கிய ஆவணம்

**அன்பார்ந்த வாடிக்கையாளர்களுக்கு,**

இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட வாடிக்கையாளர் சாசனத்தின் கீழ் வருகின்ற தேவைப்படுத்தலொன்றினை அனுசரித்து உங்களுக்குத் தேவையானதும் பொருத்தமானதுமான வங்கியியல் தயாரிப்புகளை /சேவைகளை தெரிவுசெய்வதற்காக உங்களுக்கு உதவுவதற்கு முனைகின்ற முக்கிய விடயங்கள் உள்ளடக்கிய ஆவணங்களைக் கொண்ட தொகுதியொன்றினை நாம் தயாரித்துள்ளோம்.

இம்முக்கிய விடயங்கள் உள்ளடக்கிய ஆவணமானது நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கியில் கிடைக்கப்பெறுகின்ற கடன் அட்டை தயாரிப்புகள் ் மற்றும் சேவைகள் பற்றிய பரந்த விளக்கவுரையைத் தருகின்றது. மேலதிகத் தகவல்களை நீங்கள் அறிந்து கொள்ள விரும்புவீர்காளயின், தயவுசெய்து பினவரும் முறையில் எம்முடன் தொடர்பை ஏற்படுத்துங்கள்.

தொலைபேசி: தயவுசெய்து எமது 24 மணி நேர வாடிக்கையாளர் சேவை உடனடி அழைப்பு இலக்கத்திற்கு அழைக்கவும். அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் கடன் அட்டைகளுக்கு: (011)4414141/மாஸ்டர்கார்ட் கடன் அட்டைகளுக்கு: (011)4414155
மின்னஞ்சல்: அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் கடன் அட்டைகளுக்கு: americanexpress@nationstrust.com/ மாஸ்டர்கார்ட் கடன் அட்டைகளுக்கு: creditcards@nationstrust.com
வலைத்தளம்: www.nationstrust.com/ அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் கடன் அட்டைகளுக்கு மாத்திரம்: www.americanexpress.lk
கடிதங்கள்: முகாமையாளர் - சேவைத் தரம், நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சி, கடன் அட்டை நிலையம், 256, ஸ்ரீமத் ் இராமநாதன் மாவத்தை, கொழும்பு – 15

கடன் அட்டைகள் தொடர்பில் உங்களிடம் ஏதேனும் முறைப்பாடு இருக்குமெனில், தயவுசெய்து முறைப்பாட்டு அறிவித்தலை உள்ளடக்குகின்ற எழுத்திலான சுருக்கமான அறிக்கையொன்றினை மேற்குறித்த முகவரிக்கு அனுப்பவும் அல்லது மேலேயுள்ள தொலைபேசி இலக்கம் ஊடாக எம்மைத் தொடர்புகொள்ளவும். நாம் 3 வேலை நாட்களுக்குள் உங்களுக்கு பதிலளிப்போம். முறைப்பாட்டைக் கையாளும் நடைமுறை https://www.nationstrust.com/we-value-your-feedback இல் விளக்கப்பபடுள்ளது.

**விவபரம்: கடன் அட்டைகள்**
கடன் அட்டை என்றால் என்ன?
கடன் அட்டை என்பது கொடுப்பனவுஊடகம் ஒன்றாக பயனாளருக்கு வழங்கபடுகின்ற பிளாத்திக்கு (plastic) அட்டையொன்றாகும். பொருட்கள் சேவைகளுக்காக பிந்திய திகதியில் கொடுப்பனவுசெய்வதற்கான உடமையாளரின் வாக்குறுதியின் அடிப்படையில் அப்பொருட்கள் சேவைகளை கொள்வனவு செய்வதற்கு இது உடமையாளரை இயலச் செய்கின்றது (கடன் அடிப்படையில்). ஒவ்வொரு அட்டையினதும் கடன்பெறுதல் வரையறை வங்கியினால் முன்கூட்டியே நிர்ணயிக்கப்படுகின்றன. செலுத்த வேண்டிய தொகையினை முழுமையாக அல்லது அதற்கு குறைந்தபட்சத்தினை தீர்ப்பனவு செய்ய வேண்டிய தெரிவை வாடிக்கையாளர் கொண்டிருப்பார். கடன் அட்டைகள், குறைந்து செல்கின்ற நிலுவை முறையில் வட்டியை அறவிடுகின்றன.

**துணைக் கடன் அட்டைகள்**
துணை கடன் அட்டைகள், முதன்மை அட்டை உறுப்பினரால் பரிந்துரைக்கப்பட்ட உடனடி குடும்ப உறுப்பினர்களுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் மாத்திரம் வழங்கப்படுவதுடன் முதன்மை கடன் அட்டையின் வரையறையினை பகிர்கின்றது. அட்டை மீதான அனைத்து அறவீடுகளுக்கும் /கொடுக்கல்வாங்கல்களுக்கும் முதன்மை மற்றும் துணை அட்டை உறுப்பினர்கள் கூட்டாகவும் தனித்தனியாகவும் பொறுப்புடையவராவார்கள். துணை அட்டைகள் தொடர்பிலான ஏதேனும் நடவடிக்கை முதன்மை அட்டை உறுப்பினரின் கோரிக்கையின் பேரில் மாத்திரம் மேற்கொள்ளப்படும்.

அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் கடன் அட்டைகளின் கீழ் தயாரிப்பு வகைகள்
**அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் கடன் அட்டைகளுக்கு –**
www.americanexpress.lk

**மாஸ்டர்கார்ட் கடன் அட்டையின் கீழ் தயாரிப்பு வகைகள்-**
www.nationstrust.com

**ஊக்கத் தொகைகள்/ ஊக்குவிப்புகள் உள்ளடங்கலாக வாடிக்கையாளருக்கான நன்மைகள்**
- கடன் நியதிகளில் உலகம் முழுவதும் தயாரிப்புகளை மற்றும் சேவைகளை கொள்வனவு செய்தல்.
- கடன் அட்டையினைப் பயன்படுத்தி காசு முற்பணங்களை பெற்றுக் கொள்வதற்கான இய லு மை.
- 24 மணி நேரமும் தொழிற்படுகின்ற அழைப்பு நிலையம் மற்றும் அவசர உதவி.
- டிஜிட்டல் வழி சேவைகள், மொபைல் வங்கித் தொழில் சேவை/ இணையவழி வங்கிச் சேவை/குறுந்தகவல் விழிப்பூட்டல்/ இலத்திரனியல் கூற்று.
- இணையம் ஊடாக கடன் அட்டை கட்டண பட்டியல்களை தீர்ப்பனவு செய்வதற்கான இயலுமை
- தெரிவு செய்யப்பட்ட வணிகர்களிடம் 0% தவணைக் கொடுப்பனவு திட்டங்கள் கிடைக்கப்பெறுகின்றன.
- அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் நிறுவன அட்டைகள் நீங்கலாக அனைத்து தயாரிப்புகளுக்கும் லோயல்ட்டி புள்ளிகள் வழங்கும் திட்டங்கள் கிடைக்கப்பெறுகின்றன(வழங்கப்படும் திட்டங்கள் தயாரிப்பின் ் அடிப்படையில் மாறுபடலாம்)

**கடன் காலத்தில் வாடிக்கையாளரிடமிருந்து அறவிடப்படும் கட்டணங்கள்/ அறவீடுகள் / கமி'ன் / /வட்டி மற்றும் வட்டி அறிவிடுதல்**
அட்டை உறுப்பினர, அட்டையினை பயன்படுத்தி மேற்கொள்ளப்படுகின்ற கொள்வனவுக்காக குறைந்த பட்சம் 20 நாட்கள் மற்றும் உயர்ந்தபட்சம் 50 நாட்கள் கொண்ட கடன் காலப்பகுதியினை அனுபவிக்கலாம்.

உரிய திகதியன்று அல்லது அதற்கு முன்னர் அனைத்து செலுத்த வேண்டிய தொகைகளையும் அட்டை உடமையாளர் கொடுப்பனவுசெய்கின்ற சந்தர்ப்பத்தில், அச்சுழற்சிக் காலத்திற்கு அட்டைக் கணக்கு மீது வட்டி எதுவும் அறிவிடப்படாது.

செலுத்த வேண்டிய தொகையிலிருந்து குறைந்தபட்சக் கொடுப்பனவு அல்லது பகுதிக் கொடுப்பனவு மாத்திரம் செலுத்தப்படுமாயின் வட்டி அறவிடப்படும்.

வட்டி கணிப்பிற்காக பயன்படுத்தப்படும் சூத்திரம் = மூலதனத் தொகை X வட்டி வீதம் (நாட்களின் எண்ணிக்கை/365).

வட்டியானது குறைந்து செல்கின்ற நிலுவை முறையில் நாளாந்தம் கணிப்பிடப்படுகின்றது. கூற்றின் மீது “பிந்திய திகதி” இன் கீழ் குறிப்பிடப்பட்ட திகதி ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல்களினதும் வட்டிக் கணிப்பிற்கான தொடங்குகின்ற திகதியாக கருத்தில் கொள்ளப்படும்.

**அட்டைக் கட்டணங்கள்**

- இணைவு கட்டணம் – ஒரு தடவை கட்டணம்.
- வருடாந்த கட்டணம் - ஆண்டுதோறும் அறவிடப்படும்.

**தண்டக் கட்டணங்கள்**

- வரையறையினை விஞ்சுவதற்கான கட்டணம் - அனுமதிக்கப்பட்ட கடன் வரையறை விஞ்சுமாயின் அறவிடப்படும்
- தாமதக் கொடுப்பனவுகட்டணம் - குறைந்தபட்ச கொடுப்பனவு உரிய திகதியன றிஅல்லது அதற்கு முன்னர் மேற்கொள்ளப்படாவிடின் அறவிடப்படும்.

**நிதியியல் கட்டணங்கள்** - *காசு முற்பண கட்டணம் - காசு மீளெடுப்புகள் மீது அறிவிடப்படும்.

வலுவிலுள்ள அனைத்து அரசாங்க அறவீடுகளும் (முத்திரைத் தீர்வை உள்ளடங்கலாக) ஏற்புடையவாறு அறவிடப்படும்.
**ஏனைய கட்டணங்கள் -**
அட்டைக்கு ஏற்புடைய ஏனைய கட்டணங்களின் முழுமையான விபரங்களையும் தயவுசெய்து கீழேயுள்ள வலைத்தளத்திற்கு கீழ் பார்க்க.
அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் அட்டைகளுக்கு-
www.americanexpress.lk

மாஸ்டர்கார்ட் அட்டைகளுக்கு-
www.nationstrust.com

**தயாரிப்பினை /சேவையினைப் பெற்றுக்கொள்வதற்கு பின்பற்ற வேண்டிய நடைமுறை**
தகமையும் வேண்டப்படும் ஆவணங்களும்
குறைந்தது 18 வயதுக்கு மேற்பட்டவராய் இருத்தல்.

**தொழில் பெற்றவராயின்**
- கடன் அட்டை டிஜிட்டல் விண்ணப்பப் படிவம்

- தேசிய அடையாள அட்டையின்/கடவுச்சீட்டின் பிரதி
- சம்பள அறிக்கை
- சம்பளத்தை உறு திப்படுத்தி தொழில்தருநரிடமிருந்து கடிதம்
- வதிவிட உறுதிப்படுத்தல் கட்டணப் பட்டியல் (தொலைபேசி கட்டணப் பட்டியல், நீர் கட்டணப் பட்டியல் அல்லது மின்சாரக் கட்டணப் பட்டியல்)

**சுயதொழில் செய்பவராயின்**

- கடன் அட்டை டிஜிட்டல் விண்ணப்பப் படிவம்
- தேசிய அடையாள அட்டை/ கடவுச்சீட்டின் பிரதி
- வியாபார பதிவுச்சான்றிதழ் / படிவம் 20 (கம்பனி வரையறுக்கப்பட்ட பொறுப புடையதாயின்)
- கடந்த 2 ஆண்டுகளுக்கான வரித்திரட்டு
- கணக்காய்வாளரிடமிருந்து அல்லது கடந்த 2 ஆண்டுகளுக்காக வருடாந்த வருமானத்தை உறுதிப்படுத்தும் கடிதம்
- கடந்த 3 மாதங்களுக்கான வங்கிக்கூற்று (கம்பனி மற்றும் தனிப்பட்ட இரண்டும்)
- ஏனைய வருமானத்தை உறுதிப்படுத்தல் (ஏற்புடையதாயின்)
- வதிவிட உறுதிப்படுத்தல் கட்டணப் பட்டியல் (தொலைபேசி கட்டணப் பட்டியல், நீர்க் கட்டணப் பட்டியல் அல்லது மின்சாரக் கட்டணப் பட்டியல்)

கடனட்டைகளை பயன்படுத்துவதன் மீது நியதிகளையும் நிபந்தனைகளையும் எடுத்துரைக்கின்ற வங்கியுடனான எழுத்திலான உடன்படிக்கையினை வாடிக்கையாளர் கைச்சாத்திடல் வேண்டும்.

**நடைமுறை**
நேஷன்ட் ட்ரஸ்ட் வங்கிக் கிளைகளில் ஏதேனும் ஒன்றினூடாக கடனட்டைக்கு விண்ணப்பிக்கலாம். அல்லது பின்வரும் இணைய வழியில் https://direct2you.nationstrust.com/ டிஜிட்டல் சுயமாக இணைந்து கொள்வதன் ஊடாக நீங்களாகவே இணையவழியில் விண்ணப்பிக்கலாம்.

**முக்கிய நியதிகளும் நிபந்தனைகளும்**
ஏனையவற்றுக்கு மத்தியில் பின்வருவனவற்றை நியதிகளும் நிபந்தகைளும் உள்ளடக்குகின்றன.

**அட்டையைப் பயன்படுத்தல்**

அட்டையானது உலகம் முழவதும் செல்லபடியாகும்; எனினும் அட்டை உறுப்பினர் வியாபார/வர்த்தக நோக்கங்களுக்காக அட்டையினை பயன்படுத்தலாகாது. தனிப்பட்ட தேவைகளுக்கு மாத்திரம் அது பயன்படுத்தப்பட வேண்டும். அட்டை உறுப்பினர் அவரது தனிப்பட்ட அடையாள இலக்கத்தை (PIN) எல்லா நேரங்களிலும் இரகசியமாகவும் அட்டையிலிருந்து வேறாகவும் வைத்திருத்தல் வேண்டும். தொலைதல் அல்லது காணாமல் போதல் பற்றி இலங்கையில் உள்ள வங்கியின் அட்டை நிலையத்திற்கு அறிவிக்கப்படும் வரை அட்டை மீது பெறப்படுகின்ற அனைத்து கொடுக்கல்வாங்கல்களுக்கும் அட்டை உறுப்பினர் பொறுப்படையவராக இருப்பார்.

**காசு முற்பணங்கள்**
கடன் அட்டையின் குறித்தொதுக்கப்பட்ட காசு வரையறை வரை காசு முற்பணங்களை அட்டை உடமையாளர் தானியங்கும் அட்டை இயந்திரங்கள் (ATM) அல்லது வங்கிக் கிளைகளிலிருந்து அல்லது பணம் பகிர்ந்தளிக்கும் இயந்திரங்களிலிருந்து (இயந்திரம்/ முகவர்கள்) அல்லது டிஜிட்டல் பணி சேவைகளிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். ஒவ்வொரு தொடர்புடைய வழிமுறையினதும் அனைத்து உள்நாட்டு/நாட்டு வரையறைகள் மற்றும் கட்டுப்பாடுகள் ஏற்புடையதாக இருக்கும்.

**கடன் வரையறை**
அட்டை உறுப்பினரின் கணக்கிற்கு ஏற்புடைய கடன் வரையறையை உங்களது கடன் அட்டை கூற்றில் அல்லது டிஜிட்டல் செயலி மீது பார்க்கலாம்.

**கொடுப்பனவுகள்**

கூற்றில் விபரிக்கப்பட்ட குறைந்தது “மொத்த குறைந்தபட்ச கொடுப்பனவு நிலுவை” தொகையினை அட்டைி உறுப்பினர வங்கிக்குக் கொடுப்பனவுசெய்தல் வேண்டும். ஒவ்வொரு துணை அட்டை உறுப்பினரும் முதன்மை அட்டை உறுப்பினருடன் ஒன்றில் கூட்டாக அல்லது தனியாக வங்கிக்கு கொடுப்பனவை மேற்கொள்வதற்கும் பொறுப்படையவராக இருக்கின்றார். கொடுப்பனவுமுறைகள் கடன் அட்டை கூற்றின் பின்பக்கத்தில் கிடைக்கப்பெறுகின்றன.

**அறவீடுகள்**
கடன் அட்டையானது 30 நாட்களுக்கு நிலுவையாவிருப்பின் நிலுவைத் தொகை கொடுப்பனவுசெய்யப்படும் வரை கொடுக்கல் வாங்கல்களுக்காக அட்டை முடக்கப்படும். தவணை தவறுதலின் முதல் மூன்று மாதங்களின் போது கொடுப்பனவுகளை அறவிடுவதற்காக கடிதங்கள், அழைப்புகள், குறுந்தகவல்கள் வாயிலாக ஞாபகமூட்டல்கள் அனுப்பப்படுவதுடன் தேவைப்படுமெனில் வாடிக்கையாளரிடம் விஜயங்கள் மேற்கொள்ளப்படும். வாடிக்கையாளருடன் தொடர்பை ஏற்படுத்த முடியாவிடின் வங்கி நடுவர்களை தொடர்பு கொள்ளும். மேலும், வாடிக்கையாளர் வங்கியுடன் பேணுகின்ற ஏதேனும் கணக்கை பற்று வைப்பதன் மூலம் ஏதேனும் செலுத்தவேண்டிய தொகையினை வங்கி அறவிடலாம்.

மேற்குறித்த முயற்சிகள் தோல்வியடைகின்ற போது நான்காவது மாதத்தில், நிலுவைத் தொகையினை அறிவிடுவதற்கு ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்ட வெளிவாரி படுகடன் சேகரிப்பு முகவராண்மைகளுக்கு கணக்கை வங்கி கையளிக்கலாம். மேலும் வங்கி அதன் உரிமையில் நிலுவைத் தொகையினை அறிவிடுவதற்கு அட்டை உறுப்பினர்க்கும் அனைத்து துணை அட்டை உறுப்பினர்களுக்கும் (ஏதேனும் இருப்பின்) எதிராக சட்ட நடவடிக்கைகளை தொடங்கலாம்.

நிருவகிக்கின்ற ஒழுங்கவிதிகளுக்கமைவாக கடனட்டை நிலுவைத் தொகை மற்றும் செலுத்த வேண்டியவைகள் பற்றி காலமுறையான அறிக்கையிடல் அனைத்து நிதி நிறுவனங்களின் உசாவுகைக்காக கொடுகடன் தகவல் பணியகத்திற்கு அறிக்கையிடப்படும்.

- இதிலுள்ள குறிப்பான நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் மேலதிகமாக, கடன் அடடைக்கு ஏற்புடைய அனைத்து பொதுவான நியதிகளும் நிபந்தனைகளும் முறைப்பாடு கையாளுகின்ற நடைமுறையும் https://www.nationstrust.com/images/pdf/general-business-conditions.pdf. மீது பொதுவான வியாபார நிபந்தனைகளில் விளக்கப்பட்டுள்ளன.

- காலத்திற்கு காலம் மாற்றத்திற்குள்ளாகக்கூடிய வாடிக்கையாளரிடமிருந்து அறவிடப்படும் கட்டணங்கள /கமி'ன் /வட்டி அத்துடன் வேறு வங்கி அறவீடுகளும் வங்கியின் அதிகாரபூர்வ வலைத்தளத்தில் வெள்யிடப்படுள்ளன.

- இவ் ஆவணத்தின் ஆங்கில. சிங்கள, தமிழ் உரைப்பகுதிகளுக்கிடையில் ஏதேனும் முரண்பாடு காணப்படும் பட்சத்தில், ஆங்கில உரைப்பகுதியே மேலோங்கி நிற்கும்.